27.06.2025 HMOP No.223/2023

சாட்சி: PW 1 வள்ளியம்மை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

**1.** என் உடன் பிறந்த தம்பி பெயர் கண்ணப்பன் என்றால் சரிதான். அவர் கோயம்புத்தூர் இந்துஸ்தான் கல்லூரியயில் பட்டப்படிப்பு முடித்தார் என்றால் சரிதான். அவர் பட்டப் படிப்பு முடித்த சமயத்தில் நானும் கோயம்புத்தூரில் தான் இருந்தேன் என்றால் சரிதான். அவருடைய கல்லூரி சேர்க்கையின் போது எதிர்மனுதாரரின் மாமா மற்றும் அவரது அப்பா வந்திருந்தார்கள் என்றால் இல்லை. அவர் கல்லூரியில் படித்த காலத்தில் நான் குடியிருந்த ராக்கிபாளயம், ஆலங்கோம்பு ஆகிய இடங்களுக்கு என் தம்பி வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். என் அப்பா ஆட்டோ ஓட்டுபர் என்றால் சரிதான்.

2. எதிர்மனுதாரரின் அப்பா என்ன தொழில் செய்தார் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எல்.எம்.டபில்யூவில் பிளம்பராக வேலை செய்து வந்தார். எதிர்மனுதாரரின் மாமா தனியாக மெடிக்கல் சாப் வைத்துள்ள விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. எதிர்மனுதாரின் சகோதரிகள் அனைவரும் திருமணமானவர்கள் என்றும், அவர்கள் செட்டிலாகிவிட்டார்கள் என்றால் சரிதான். நான் ஆலங்கோப்பில் தனிக்குடித்தனத்தில் இருக்கும் போதுதான் தமிழக அரசாங்கம் நடத்தும் குரூப் 4 தேர்விற்கு ஆன்லைன் மூலமாக பயிற்சி பெற்று வந்தேன் என்றால் இல்லை.

3. நான் குரூப் 4 எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் தனியாரில் சேர்ந்து படிக்க என் நகைகளை அடகு வைத்தேன் என்றால் இல்லை. என் அப்பா ஓட்டி வந்த ஆட்டோவை அடகுவைத்ததிலிருந்து மீட்க எதிர்மனுதாரரின் மாமா பெரியண்ணனிடமிருந்து ரூ.50 ஆயிரம் வங்கி பரிவர்த்தனையின் மூலம் வாங்கிய விபரம் எனக்குத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் 3ம் பத்தியில் சொல்லாலும், செயலாலும் என்னை கொடுமைப்படுத்தினார்கள் என்று நான் சொல்லியுள்ளதில் எவ்வகையில் என்னை கொடுமைப்படுத்தினார்கள் என்று நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. 2வது பத்தியில் எதிர்மனுதாரருக்கு உறவினர்கள் அறிவுறை கூறினார்கள் என்று குறிப்பிட்டுள்ளதில் எந்த உறவினர் என்ன அறிவுறை கூறினார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். ராக்கிபாளயத்தில் தங்கி இருந்த வாடகை வீட்டில் நாங்கள் ஒப்பந்தம் எதுவும் போடவில்லை என்றால் சரிதான். ராக்கிபாளயத்தில் இருந்த வீட்டின் உரிமையாளரிடன் விசாரித்தால் யார் முன்பணம் கொடுத்தார் எந்த விபரம் தெரியவரும் என்றால் சரிதான். நான் மனுவில் கூறியுள்ளபோது போல் எந்த ஒரு இடத்திலும் எதிர்மனுதாரரும், அவரது குடும்பத்தார்களும் என்னை கொடுமைசெய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. எதிர்மனுதாரரும், அவரது குடும்பத்தார்களும் வரதட்சனைக்கேட்டு என்னைக் கொடுமைப்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விவாகரத்து மனுவை எதிர்கொண்டு எதிர்மனுதாரர் என்னுடன் மட்டும்தான் வாழவேண்டும் என்பதற்காக போராடி வழக்கு நடத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, காசுக்காத்தான் இந்த வழக்கை நடத்திவருகிறார். இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்ததக்கது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.